Judicial Form No. 53
(See Rule 42 of CRP)
DEPOSITION OF WITNESS.
(Chapter XXIII, Cr.P.C.)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.II, SRIVILLIPUTTUR
CC NO.497/2020

**Depositions of PW- 4**

| Name | திரு.ஆறுமுகம் | Occupation | விவசாயம் |
|---|---|---|---|
| Father's name | ஊர்க்காவலன் | Calling | |
| Village | அழகாபுரி காந்திநகர் | Religion | |
| Taluk | | Age. | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 03rd day of February 2026.

03.02.2026

எதிரி ஆஜர் இல்லை. மனுதாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.

**முதல் விசாரணை**

நான் தற்போது அழகாபுரி காந்திநகரில் குடியிருந்து வருகிறேன். நான் கூலி வேலை செய்து வருகிறேன். கடந்த 25.11.2009 அன்று எனது மனைவி காளீஸ்வரியும் எனது மகள் சௌந்தர்யாவும் திருவில்லிபுத்தூரிலுள்ள மார்க்கெட்டிற்கு காய்கறி வாங்க வந்தபோது எனது மனைவி கட்டை பையில் வைத்திருந்த மணி பர்சிலிருந்து மோதிரம்–2, கம்மல் ஒரு ஜோடி, மாட்டல் ஒரு ஜோடி, ஆகியவற்றை திருடி சென்றுவிட்டார்கள். அது சம்மந்தமாக எனது மனைவியும் எனது அம்மா சீதையும் ஆட்சியர் அலுவலகத்தில் மனு கொடுத்தார்கள். திருவில்லிபுத்தூர் நகர் காவல்நிலையத்திலிருந்து எங்களை அழைத்து மேற்படி நகைகளை எனது மனைவியிடம் கொடுத்தார்கள். மேற்படி நகையை திருடிய நபர் ஒரு பெண் என்று மட்டும் தெரிந்துகொண்டேன். மற்ற விவரங்கள் எனக்கு தெரியாது. போலீசார் என்னை விசாரித்தனர்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை–**

மேற்படி நகை காணாமல் போனது சம்மந்தமாக எனது மனைவியும் எனது மகளும் ஆட்சியர் அலுவலகத்தில் மனு கொடுத்து ஒரு வாரத்தில் எங்களது நகையை திரும்பி எங்களிடம் கொடுத்துவிட்டார்கள் என்றால் சரிதான்.

சாட்சி சொல்ல சொல்ல என்னால் சொல்லி தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிகளிடம் படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

நீதித்துறை நடுவர் எண்.2,
திருவில்லிப்புத்தூர்.

Judicial Form No. 53
(See Rule 42 of CRP)
DEPOSITION OF WITNESS.
(Chapter XXIII, Cr.P.C.)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.II, SRIVILLIPUTTUR
CC NO.497/2020

**Depositions of PW- 5**

| Name | திரு.கண்ணன் | Occupation | ஆட்டோ ஓட்டுநர் |
|---|---|---|---|
| Father's name | முத்து | Calling | |
| Village | அழகாபுரி | Religion | |
| Taluk | | Age. | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 03rd day of February 2026.

03.02.2026

எதிரி ஆஜர் இல்லை. மனுதாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.

**முதல் விசாரணை**

நான் தற்போது அழகாபுரியில் குடியிருந்து வருகிறேன். நான் ஆட்டோ ஓட்டுநராக வேலை செய்து வருகிறேன். கடந்த 25.11.2019 அன்று நான் திருவில்லிபுத்தூர் பேருந்துநிலையத்தில் நின்றுகொண்டிருந்தபோது அங்கு வந்த திருவில்லிபுத்தூர் நகர் காவல்நிலைய போலீசார் திருட்டு வழக்கு சம்மந்தமாக என்னை விசாரித்தனர். அதன் பின் வரைபடம் வரைந்து எழுதிய தாள் ஒன்றில் என்னிடம் கையெழுத்து பெற்றார்கள். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரிலுள்ள முதலாவது கையெழுத்து என்னுடையது தான். **பார்வை மகஜர் அசாஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. போலீசார் என்னை விசாரித்தனர்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை–**

அசா.4 ஆறுமுகம் எனது அண்ணன் முறை ஆவார். நான் அழகாபுரி ஆட்டோ ஸ்டாண்டில் ஆட்டோ வைத்து ஓட்டி வருகிறேன். மேற்படி அழகாபுரி ஆட்டோ ஸ்டாண்டிற்கு வந்து போலீசார் விசாரணை செய்தார்களா என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. போலீசார் நகை காணாமல் போன மறுநாள் என்னிடம் கையெழுத்து பெற்றார்களா என்றால் அதுபற்றி எனக்கு நியாபகமில்லை. போலீசார் என்னிடம்

கையெழுத்து பெற்ற மேற்படி தாளில் என்ன எழுதியிருந்தது என்பது பற்றி எனக்கு தெரியாது. மேற்படி அசா.4 ஆன எனது அண்ணன் கேட்டுக்கொண்டதற்கிணங்க காவல்நிலையத்தில் வைத்து கையெழுத்து செய்து கொடுத்துவிட்டு தற்போது பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

சாட்சி சொல்ல சொல்ல என்னால் சொல்லி தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிகளிடம் படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

நீதித்துறை நடுவர் எண்.2,
திருவில்லிப்புத்தூர்.